RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 281 | அக்டோபர் 14, 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ஆந்திரா சென்றடைந்த முதல்-அமைச்சர் விஜய்க்கு உற்சாக வரவேற்பு

சென்னை, அக்.14-

தமிழக முதல்-அமைச்சராக விஜய் பதவியேற்ற பிறகு, முதல் முறையாக ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடுவை சந்திப்பதற்காக நேற்று விஜயவாடா சென்றார். இதற்காக மதியம் 2.30 மணிக்கு சென்னை நீலாங்கரையில் உள்ள தனது இல்லத்தில் இருந்து காரில் புறப்பட்ட முதல்-அமைச்சர் விஜய், சென்னை விமான நிலையத்தில் இருந்து தனி விமானம் மூலம் ஆந்திரா புறப்பட்டார்.



பிற்பகல் 3.45 மணிக்கு விஜயவாடா சென்றடைந்த முதல்-அமைச்சர் விஜய்க்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை காண்பதற்காக மக்கள் அதிகம் பேர் விமான நிலையம் அருகே வந்திருந்தனர். விஜயவாடா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட முதல்-அமைச்சர் ஜோசப் விஜய், அங்கிருந்து 30.5 கி.மீ. தொலைவில் உள்ள கனக துர்கா கோவிலுக்கு காரில் சென்று தரிசனம் செய்தார்.

சென்னையில் தபால்துறை குறைதீர்ப்பு முகாம்

மாலை 4.55 மணிக்கு கோவிலுக்கு செல்லும் அவர், மாலை 5 மணி முதல் 5.45 மணி வரை நடைபெறும் சிறப்பு பூஜையில் கலந்துகொண்டு அம்மனை தரிசித்தார். பின்னர், அங்கிருந்து மாலை 5.45 மணிக்கு புறப்பட்டு அவர் மாலை 6 மணிக்கு ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு இல்லத்தை சென்றடைந்தார். ஒரு மணி நேரம் அங்கிருக்கும் முதல்-அமைச்சர் விஜய், கோதாவரி - காவிரி ஆறு இணைப்புத் திட்டம் மற்றும் கிருஷ்ணா நீரை திறந்துவிடுவது குறித்து அம்மாநில முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடுவுடன் கலந்து பேசிவிட்டு சென்றார்.

இரவு 7.10 மணிக்கு சந்திரபாபு நாயுடு இல்லத்தில் இருந்து புறப்படும் முதல்-அமைச்சர் விஜய், உத்சவ் மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சென்னை திரும்பினார்.

## ஒரு யூனிட் மின்சாரம் ரூ.35-க்கு வாங்கும் ஒப்பந்தம் ஏன்? - அமைச்சர் நிர்மல் குமார் விவரிப்பு

சென்னை: அக்.14-

"தமிழகத்தில் மின்பற்றாக்குறையை சமாளிக்க ஒரு யூனிட் ரூ.35 என்ற விலையில் 4500 மெகாவாட் மின்சாரம் வாங்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள ஒப்பந்தம் பல்வேறு அரசியல் கட்சிகளாலும் கடுமையாக விமர்சிக்கப்படும் நிலையில், அது குறித்து தமிழக மின் துறை அமைச்சர் நிர்மல் குமார் விவரித்துள்ளார்.

"இந்த ஒப்பந்தம் வரும் 15 முதல் 31-ம் தேதி வரை மட்டும் தான். இதனால் ஒரு நாளைக்கு நமக்கு கூடுதலாக ரூ.5 கோடி மட்டுமே செலவாகும்" என அமைச்சர் விளக்கியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் நிர்மல் குமார், "மின் கொள்முதலுக்காக ஓர் ஒப்பந்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளோம். உச்ச பயன்பாட்டு நேரமான மாலை 6 மணி முதல் 12 மணிவரை நமது தேவையை பூர்த்தி செய்வதற்காக இந்த ஒப்பந்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் தமிழகத்தின் மின் தேவை 16,800 மெகா வாட்டாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டில் இப்போது 21,700 மெகாவாட் அளவுக்கு, அதாவது 30 சதவீதம் நமது மின் தேவை அதிகரித்துள்ளது. எல்-நினோ காரணமாக தமிழகத்தில் வெப்பம் குறையவில்லை, நாடு முழுவதும் இந்த நிலைதான் உள்ளது. இது யாரும் எதிர்பார்க்காத ஒன்று.



எல்லா மாநிலங்களும் மின்சாரத்தை ஒன்றிய தொகுப்பில் இருந்துதான் வாங்குகிறோம். எனவே தேசிய அளவில் உற்பத்தி என்ன, தேவை என்ன என்ற முன்னறிவிப்பை செய்ய வேண்டும் என கடந்த வாரம் ஒன்றிய அமைச்சருடனான ஆலோசனையின் போது தெரிவித்தேன். முன்பே இதுபோல எங்களிடம் மின்சாரம் இருக்காது என ஒன்றிய அரசு தெரிவித்திருந்தால், நாங்கள் வேறு வகையில் ஏற்பாடு செய்திருப்போம்.

ஒன்றிய தொகுப்பில் மின்சாரம் இல்லாததால், இதுபோல அதிகவிலைக்கு வாங்கும் சூழல் ஏற்பட்டது. எனவே தான், கேஸ் மூலமாக உற்பத்தி செய்யும் மின்சாரத்தை யூனிட்டுக்கு ரூ.35-க்கு வாங்க ஒப்பந்தம் செய்துள்ளோம். அவர்களின் உற்பத்தி செலவு அதிகம் என்பதால் அதிக விலைக்கு வாங்குகிறோம்.

என்எல்சியின் ஒன்றிய தொகுப்பில் இருந்து வரவேண்டிய மின்சாரத்தில் 1850 மெகாவாட் கடந்த மாதத்தில் இருந்து தமிழகத்துக்கு வரவில்லை. அதுமட்டுமின்றி காற்றாலைகள் மூலம் 3500 மெகாவாட் மின்சாரத்துக்கு திட்டமிட்டிருந்தோம், அதில் 500 மெகாவாட்தான் கிடைக்கிறது. இது இரண்டும் நமக்கு கிடைக்காததால், நாம் புதிதாக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளோம். இதனை செய்யவில்லை என்றால் மற்ற மாநிலங்களைப் போல நாமும் மின்வெட்டு செய்ய வேண்டிய சூழல் ஏற்படும்.

யூனிட் ரூ.35க்கு வாங்கும் மின்சாரம் என்பது 24 மணி நேரத்துக்கும் கிடையாது. உச்ச பயன்பாட்டு நேரமான 6 மணி நேரத்துக்கு மட்டுமே. இந்த ஒப்பந்தம் வரும் 15 முதல் 31ம் தேதி வரை மட்டும் தான். நாம் 3500 மெகாவாட்டுக்கு அழைப்பு விடுத்துள்ளோம், ஆனால் 1500 மெகாவாட் மட்டும் தான் வாங்கப் போகிறோம். இதனால் ஒரு நாளைக்கு நமக்கு கூடுதலாக ரூ.5 கோடி மட்டுமே செலவாகும்.

அதுபோல தீபாவளி, கிறிஸ்துமஸ், புத்தாண்டு பண்டிகை கால தேவையை சமாளிக்க புதிய திட்டங்களை போட்டுள்ளோம். திமுக ஆட்சியில் இருந்த 5 ஆண்டுகளில் நீண்ட கால ஒப்பந்தங்கள் எதுவும் போடப்படவில்லை. அதனால் தான் நாம் குறுகிய கால ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நாம் இந்த மாதத்தில் நீண்ட கால ஒப்பந்தம் மற்றும் 5 ஆண்டுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளோம். கடந்த திமுக ஆட்சியில் மின்சார துறைக்கு 4 அமைச்சர்கள் மாறி மாறி இருந்தனர். அவர்கள் துறையாக முறையாக கவனிக்கவில்லை" என்றார்.

## "பள்ளிகளில் இனி வாரத்தில் 5 நாட்களும் உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும்" - அமைச்சர் ராஜ்மோகன் அறிவிப்பு

சென்னை: அக்.14-

"பள்ளிகளில் இனி வாரத்தில் 5 நாட்களும் உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும்" என பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்தார். இதற்காக, தமிழக அரசின் மாநில பாடத் திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கான திருத்திய கால அட்டவணையை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.



தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ராஜ்மோகன், "இனி வாரத்தில் 5 நாட்களும் உடற்கல்வி வகுப்புகளை நடத்தப்படும். அதற்கு வழிவகை செய்யும் திருத்திய கால அட்டவணை வெளியிடுகிறோம். இனி தினந்தோறும் மாணவர்களுக்கு உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும். உடற்கல்வி வகுப்புகளைக் காட்டாயமாக ஒதுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அந்த வகுப்புகளை நிறுத்தக்கூடாது.

மாணவர்கள் உடற்பயிற்சி வகுப்புக்குச் செல்ல ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும். அதற்கான மைதானங்கள், பயிற்சி, விளையாட்டு உபகரணங்களை ஏற்பாடு செய்ய வேண்டும். 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உடற்கல்வி ஆசிரியர் காலிப் பணியிடங்கள் உள்ளன. அதில் 2 ஆயிரம் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளதாக நான் கண்டறிந்தேன்.

ஒரு உடற்கல்வி ஆசிரியர் காலிப்பணியிடம்கூட இருக்கக்கூடாது என நான் உத்தரவிட்டுள்ளேன். அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. திருத்திய கால அட்டவணை மூலம் மாணவர்களுக்கு தினமும் உடற்கல்வி வகுப்புகள் கிடைத்துள்ளது. சாதி, மதம், நிறம், விளையாட்டு திறன், உயரம், குள்ளம் என எதற்காகவும், எந்தக் குழந்தையையும் விளையாட்டில் இருந்து ஒதுக்கி வைக்காதீர்கள்" என்று அமைச்சர் தெரிவித்தார்.

## அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ரூ.42 லட்சம் நலத்திட்ட உதவி: அமைச்சர் முகமது பர்வேஸ் வழங்கினார்

சென்னை: அக்.14-

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த அமைப்புசாரா தொழிலாளர்கள் 100 பேருக்கு, ரூ.42 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நல அமைச்சர் முகமது பர்வேஸ் வழங்கினார்.

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை அண்ணா நகரில் உள்ள தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இவ் விழாவில் சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த 100 பயனாளிகளுக்கு ரூ.42,21,900 மதிப்பிலான உதவித் தொகையை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் முகமது பர்வேஸ் வழங்கினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு உதவிகளை வழங்குவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களால் வழங்கப்படும் விரிவான நலத்திட்டங்களில், திருமண உதவி, மகப்பேறு உதவி, குழந்தைகளின் கல்வி உதவி, விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கான உதவி, மாதாந்திர ஓய்வூதியம், இயற்கை மரண உதவி, பணியிட விபத்து மரண உதவி மற்றும் விபத்து ஊனம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் அனைத்து சேவைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மாவட்டந்தோறும் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலகங்கள் மூலம் பதிவு, புதுப்பித்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களில் கடந்த மே 10 முதல் செப்டம்பர் 30 வரை 3 லட்சத்து 53 ஆயிரத்து 840 தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்துள்ளனர்.

6 லட்சத்து 88 ஆயிரத்து 674 தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் ரூ.688 கோடியே 8 லட்சத்து 51 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. 5 லட்சத்து 88 ஆயிரத்து 296 ஓய்வூதியதாரர்கள் மாதம்தோறும் ரூ.1,200 ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை செயலர் கொ. வீர ராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் மா. வள்ளலார் மற்றும் கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், இணை ஆணையர்கள் மற்றும் தொழிலாளர் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## "திமுக ஆட்சியில் ரூ.20-க்கு வாங்கப்பட்ட மின்சாரம் இப்போது ரூ.35-க்கு கொள்முதல்" - செந்தில் பாலாஜி குற்றச்சாட்டு

சென்னை: அக்.14-

"திமுக ஆட்சியில் ரூ.20-க்கு மின்சாரம் கொள்முதல் செய்ததை விமர்சித்த தவெக, ரூ.35-க்கு கொள்முதல் செய்கிறது. தமிழகத்தில் தவெக ஆட்சிப்பொறுப்பேற்று 5 மாதங்களாகியும், மின்வெட்டை சீர் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உச்சபட்சமாக தலைமைச் செயலகத்திலேயே மின்வெட்டுப் பிரச்சினை ஏற்படுகிறது," என திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி குற்றஞ்சாட்டியுள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடத்தில் பேசுகையில், "தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்தது முதல் மின்வெட்டு பற்றி பேசாத நாட்கள், செய்திகள் வெளிவராத நாட்கள் என ஒருநாள் கூட இல்லை. அமைச்சர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், பட்டமளிப்பு விழாக்களில் கூட மின்வெட்டு ஏற்பட்டு வருகிறது.

தமிழகத்தில் ஒவ்வொரு துறையிலும் ஏற்படக்கூடிய நிர்வாகத் தோல்வியால் மக்கள் அவதியடைவது குறித்து இன்றைய டம்மி முதல்வருக்கு கவலையில்லை. இவர், வெறும் ரீல்ஸை மட்டுமே முன்வைத்து, மக்களை ஏமாற்றி ஆட்சி செய்து வருகிறார்.

உச்சபட்சமாக தலைமைச் செயலகத்திலேயே மின்வெட்டுப் பிரச்சினை ஏற்படுகிறது. மின்துறை அமைச்சர் அவருடைய துறையைத் தவிர மற்ற எல்லாத் துறை சார்ந்த கேள்விகளுக்கும் பதில் சொல்வார். ஆனால், அவருடைய துறையில் கேள்வி கேட்டால் பதில் இருக்காது.

திமுக ஆட்சியின்போது எந்தவித தடையும் இன்றி சீராக மின்விநியோகம் செய்யப்பட்டது. திமுக ஆட்சியில் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் உச்சபட்ச மின்தேவை ஏற்படும் என்பதற்காக முன்கூட்டியே கணக்கெடுத்து, பொங்கலுக்கு முன்பாகவே ஒப்பந்தங்களை மேற்கொள்வோம்.

நம் சொந்த மின் உற்பத்தி ஆலையில் கோளாறு ஏற்பட்டால் மட்டும், அவசரத் தேவைக்காக பரிமாற்றம் முறையில் மின்சாரம் வாங்குவோம். ஆனால், இன்றைய தவெக அரசு முழுக்க முழுக்க வெளிச் சந்தையில் மின் கொள்முதல் செய்கிறது. தவெக அரசு வெளிப்படை இல்லாமல் இருக்கிறது. ஏன் சொந்த உற்பத்தியை குறைத்தீர்கள். மின்சார வாரியம் முழுக்க முழுக்க முறைக்கேட்டில் ஈடுபட்டுள்ளது.

திமுக ஆட்சியில் ரூ.20-க்கு மின்சாரம் கொள்முதல் செய்ததை விமர்சித்த தவெக, ரூ.35-க்கு கொள்முதல் செய்கிறது. தமிழகத்தில் தவெக ஆட்சிப்பொறுப்பேற்று 5 மாதங்களாகியும், மின்வெட்டு குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முதலில் ஃபியூஸ் கேரியர் காணவில்லை என்றார்கள், பிறகு கருப்பு ஆடுகள் என்றார்கள், தற்போது பஞ்சாப்பில் 15 மணிநேரம் மின்வெட்டு இருக்கிறது என்கிறார்கள். இதுபோன்ற மோசமாக சூழ்நிலையில் தவெக செயல்படுகிறது. மின்சார கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. மின்வெட்டை அமல்படுத்தியுள்ள அரசாக தவெக அரசு உள்ளது. திமுக அரசை குறை சொல்ல வேண்டும் என்பதுதான் இவர்களின் எண்ணம்" என்று செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

# திருப்பத்தூர் மாவட்டத்தில் அதிர்ச்சி: கல்லாற்றுப் பாலப் பகுதியில் பகிரங்கமாக அரங்கேறும் மணல் கொள்ளை!





திருப்பத்தூர், அக்.14–

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி வட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியம், காவேரிப்பட்டு மற்றும் கேத்தாண்டப்பட்டி ஊராட்சிகளுக்கு உட்பட்ட கல்லாற்று 5 கண் ரயில்வே பாலம் மற்றும் அதனை சுற்றியுள்ள விவசாய நிலப் பகுதிகளில், இரவு நேரங்களில் தொடர்ந்து மணல் கொள்ளை நடைபெற்று வருவதாக சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, இரவோடு இரவாக மாட்டு வண்டிகள் மற்றும் டிராக்டர்கள் மூலம் ஆற்றுப் படுகைகளில் மணல் அள்ளப்படுவதால், நிலத்தடி நீர்மட்டம் கடுமையாகப் பாதிக்கப்படுவதோடு, இப்பகுதியில் உள்ள விளைநிலங்களும் சேதமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேலும், இந்த சட்டவிரோதச் செயல்களால் அப்பகுதி விவசாயிகளும் பொதுமக்களும் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட வருவாய்த் துறையினரும், காவல் துறையினரும் உடனடியாகத் தகுந்த ரோந்துப் பணிகளை மேற்கொண்டு, மணல் கொள்ளையில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பார்களா என்ற எதிர்பார்ப்பும் கோரிக்கையும் பொதுமக்களிடையே எழுந்துள்ளது.

# திருப்பூரில் ‘தாய்மாமன் தங்க மோதிரம்’ திட்டம் 2,480 குழந்தைகளுக்கு தலா 1 கிராம் தங்க மோதிரம்: அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகளுக்குத் தங்க மோதிரங்களை வழங்கிய மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே!



திருப்பூர் அக்.14–

திருப்பூர் மாவட்டத்தில் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறந்த 2,480 குழந்தைகளுக்கு ‘தாய்மாமன் தங்க மோதிரம்’ திட்டத்தின் கீழ் தலா ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படுவதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் வி. சத்தியபாமா, பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் கே. ராம்குமார் ஆகியோர் முன்னிலையில் குழந்தைகளுக்குத் தங்க மோதிரங்களை வழங்கினார்.

ஜூன் 22 முதல் பிறந்த குழந்தைகளுக்குப் பயன்!

தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்குத் தலா ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தை அறிவித்ததாகவும், செப்டம்பர் 28–ஆம் தேதி மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்ததாகவும் வழங்கப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, திருப்பூர் மாவட்டத்தில் 22-06-2026 முதல் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறந்த குழந்தைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் தங்க மோதிரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவமனை வாரியாகப் பயனாளிகள் விவரம்

திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 1,809

தாராபுரம் அரசு மருத்துவமனை 377

உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை 294

மொத்தம் 2,480

தாய்மார்களுக்கு நேரடியாக அழைப்பு!

திட்டத்தின் கீழ் பயனடைய வேண்டிய குழந்தைகளின் தாய்மார்களை அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவக் குழுவினர் தொடர்பு கொண்டு, தங்க மோதிரம் வழங்கப்படும் இடம் மற்றும் தேதி குறித்த விவரங்களைத் தெரிவிப்பார்கள்.இதற்காக வட்டார மருத்துவ அலுவலர், மருத்துவ அலுவலர், சமுதாய சுகாதார செவிலியர், பகுதி சுகாதார செவிலியர் மற்றும் கிராம அல்லது நகர்ப்புற சுகாதார செவிலியர் ஆகியோர் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இனிவரும் நாட்களில் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு, தாய்மார்கள் பிரசவத்திற்குப் பின்னர் வீடு திரும்பும் நாளிலேயே அந்தந்த மருத்துவமனைகளில் தங்க மோதிரம் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாகச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.தனது குழந்தைக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் கிடைத்தது குடும்பத்தினருக்கு மகிழ்ச்சியளிப்பதாகக் கூறிய அவர், திட்டத்திற்காக அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

அரசு அதிகாரிகள் பங்கேற்பு!

நிகழ்ச்சியில் துணை மேயர் ரா. பாலசுப்பிரமணியம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் ரா. மனோன்மணி, மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் ஜெயந்தி, மருத்துவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



# பாடியநல்லூர் ஸ்ரீ ஆலயத்தம்மன் நகர் குடியிருப்பு சங்க நிர்வாகிகள் கோரிக்கை

மாதவரம், அக்.14–

மாதவரம் சட்டமன்ற தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் பேரூராட்சிக்கு உட்பட்ட ஸ்ரீ ஆலயத்தம்மன் நகர் குடியிருப்போர் நலச்சங்கம் பகுதிக்கு தவெக பாடியநல்லூர் பேரூராட்சி செயலாளர் முத்துக்குமார் வந்து அப்பகுதி வாழ் மக்களிடம் தற்போதைய குறைகளை கேட்டார். அப்போது அப்பதியில் உள்ள குறைகளை கோரிக்கையாக அப்பகுதி வாழ்மக்கள் கூறினர்.பின்னர் உடனடியாக தங்கள் பகுதியில் உள்ள குறைகளை சரிசெய்து தருகிறோம் என்று உறுதியளித்தார். இதில் சங்க நிர்வாகிகள் முத்து, முக்கேஷ், தலைவர் செந்தில்குமார், செயலாளர் ஆறுமுகம், பொருளாளர் எல்லப்பன், வழக்கறிஞர்கள் சக்தி, பாலமுரளி, பாலாஜி உள்ளிட்ட கிராமபொதுமக்கள் உடனிருந்தனர்.





# தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை தாம்பரத்தில் அமைச்சர் சரத்குமார் தொடங்கி வைத்தார்

தாம்பரம், அக்.14–

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தனி சட்டமன்ற தொகுதியில் இடைத்தேர்தல் கடந்த 6ம் தேதி நடைபெற்றது. இதையடுத்து, கடந்த 9ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் தவெக வேட்பாளர் மரகதம் குமரவேல் வெற்றி பெற்று எம்எல்ஏவாக தேர்வு செய்யப்பட்டார்.

இடைத்தேர்தல் காரணமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால், பல்வேறு அரசு திட்டங்களை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் நடத்தை விதிகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. இதையடுத்து, மாவட்டத்தில் அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மீண்டும் முழுமையாக அமல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, சட்டமன்ற இடைத்தேர்தல் காரணமாக தொடங்க முடியாமல் இருந்த ‘தாய்மாமன் தங்க மோதிரம்’ திட்டம் தற்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. தாம்பரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழக மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சரத்குமார் கலந்து கொண்டு, திட்டத்தின் கீழ் பயனாளிகளான 33 குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை அணிவித்து திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வீரப்பன், பல்லாவரம் எம்எல்ஏ காமாட்சி, சுகாதாரத்துறை மாவட்ட இணை இயக்குனர் மலர்விழி, மருத்துவமனை டீன் சீனிவாச ராஜா, அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தாம்பரத்தில் ‘வெற்றிப் பயணம்’ திட்டத்தை அமைச்சர் சரத்குமார் தொடங்கி வைத்தார்







தாம்பரம், அக்.14–

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தனி சட்டமன்ற தொகுதியில் இடைத்தேர்தல் கடந்த 6ம் தேதி நடைபெற்றது. இதையடுத்து, கடந்த 9ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் தவெக வேட்பாளர் மரகதம் குமரவேல் வெற்றி பெற்று எம்எல்ஏவாக தேர்வு செய்யப்பட்டார்.

இடைத்தேர்தல் காரணமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால், பல்வேறு அரசு திட்டங்களை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் நடத்தை விதிகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. இதையடுத்து, மாவட்டத்தில் அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மீண்டும் முழுமையாக அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, சட்டமன்ற இடைத்தேர்தல் காரணமாக தொடங்க முடியாமல் இருந்த ‘வெற்றிப் பயணம்’ திட்டம் தற்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதில் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சானடோரியம் பேரறிஞர் அண்ணா பேருந்து நிறுத்தத்தில் வெற்றிப் பயணம் திட்டத்தை மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் த.சரத்குமார் தொடங்கி வைத்தார். தொடர்ந்து, பேருந்தில் பயணம் செய்த பொதுமக்களுக்கு இலவச பயணச்சீட்டுகளை வழங்கியதுடன், இனிப்புகளையும் வழங்கினார்.

நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் ஆர்.சரண்யா, பகுதி கழகச் செயலாளர்கள் அகிலன், சிட்லபாக்கம் யோகேஷ், தவெக நிர்வாகிகள், ஆஷிக், பாலா, அரசு அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதனிடையே, சேலையூர் பகுதியைச் சேர்ந்த 90 சதவீத மாற்றுத்திறனாளியான சி. கார்த்திக் சந்திரசேகர், தனது வாழ்வாதாரத்திற்காகவும், அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதியும் சேலையூரில் இ-சேவை மையம் தொடங்க அனுமதி வழங்கக் கோரி அமைச்சர் சரத்குமாரிடம் மனு அளித்தார்.

மனுவைப் பெற்றுக் கொண்ட அமைச்சர், அவரது கோரிக்கையை பரிசீலித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார் இந்த நிகழ்ச்சியில் தவெக நிர்வாகிகள் பி.நரேந்திரன், பி.கே.கோபி, கே.ராமகிருஷ்ஷணன், எஸ்.ஸ்ரீதர், நிக்லாஸ், கே.ரவி, கே.நடராஜன், தினகரன், செல்வகுமார், அஹமதுகனா, அம்பேத்கர், உமார், ரவிசந்திரன், ராஜசேகரன், வெங்கேடஷன், தெய்வநயாகி, முரளி, ஏழுமலை, ஜெமின் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# கிருஷ்ணகிரியில் 22ம் தேதி வீ த லீடர் அமைப்பின் சார்பில் மண்டல அளவிலான மகளிர் மாநாடு

கிருஷ்ணகிரி, அக்.14–

கிருஷ்ணகிரியில் வருகிற 22ம் தேதி வீ த லீடர் அமைப்பின் சார்பில் மண்டல அளவிலான மகளிர் மாநாடு நடைபெறுகிறது.

பாஜ மாநிலத் தலைவராக இருந்த அண்ணாமலை, கடந்த ஜூன் மாதம் 5ம் தேதி, அக்கட்சியில் இருந்து விலகி, வீ த லீடர்ஸ் என்ற அமைப்பை உருவாக்கினார். இதில், 50 லட்சம் பேர் உறுப்பி னராக சேர்ந்த பின், இந்த அமைப்பை அரசியல் கட்சியாக மாற்று வேன் என அவர் அறிவித்தி ருந்த நிலையில், தற்போது 21 லட்சம் பேர் உறுப்பி னர்களாக இணைந்துள்ளனர். இதையடுத்து, கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகம் அடுத்துள்ள வெங்கடேஸ்வரா திடலில் வருகிற 22ம் தேதியன்று, மண்டல அளவிலான மகளிர் மாநாடு நடக்கிறது. இதில், வீ த லீடர் அமைப்பி னர் தலைவர் அண்ணாமலை கலந்து கொள்ள உள்ளார். இதற்கு மேடை அமைப்பதற்கான பூமி பூஜை நேற்று நடந்தது. இது குறித்து முன்னாள் எம்.பி., நரசிம்மன் கூறுகையில், வீ த லீடர் அமைப்பில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 67,000 பேர் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். இங்கு நடக்கும் மாநாட்டில், பெண்கள் 20 ஆயிரம் பேரும், ஆண்கள் 20 ஆயிரம் பேரும் கலந்து கொள்ள உள்ளனர். இதில் பங்கேற்கும் அண்ணாமலை, பெண்களின் முன்னேற்றம், எதிர்காலம், அவர்களின் வளர்ச்சி குறித்து ஆலோசனை வழங்க உள்ளார். மாநாடு பகல் 3 மணி முதல் இரவு 7 மணி வரை நடக்க உள்ளது. அடுத்த மாதம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இரண்டரை லட்சம் பேருக்கு அரசியல் நிலவரம் குறித்து, அண்ணாமலை பயிற்சி அளிக்கிறார். இதற்கு பின், உள்ளாட்சி மற்றும் எம்.பி., தேர்தலில் பங்கேற்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார். இவ்வாறு அவர் கூறினார். இதில், சாந்தி விக்ரம், மன்னன் சிவா, மோதிலால், ஹரி பிரகாஷ், சுவாமி சரவணன், மதிவாணன், திருப்பதி, புனிதா, கோவிந்தன், துரை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொதுமக்களுக்கு சோலார் மின்சாரம் தொடர்பான விழிப்புணர்வு சிறப்பு முகாம்




மாதவரம், அக்.14–

மாதவரம் தொகுதி தமிழ்நாடு மின் பகீர்மான கழகம் சென்னை மின் பகீர்மான வட்டம் மேற்கு ஆவடி கோட்டம் சார்பில் வெள்ளானூர் ஊராட்சி வேல்டக் சாலையில் உள்ள ஆர்.ஆர்.திருமண மண்டபத்தில் பொதுமக்களுக்கு சோலார் மின்சாரம் தொடர்பான விழிப்புணர்வு சிறப்பு முகாம் சென்னை மேற்கு மேற்பார்வையாளர் சித்ரா சௌந்தரபாண்டியன் ஏற்பாட்டில் ஆவடி செயற்பொறியாளர் கிருஷ்டோபர்லியோராஜ், சென்னை மேற்கு பொது செயற்பொறியாளர் சரவணகுமார் தலைமையில் நடைபெற்றது.உதவி செயற்பொறியாளர்கள் கார்த்திக்கணேஷ், ராஜேஷ்சன், பாலசந்தர், வெங்கடேஷ்பாபு, விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக உதவி பொறியாளர் சரவணன் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சிக்கு சோலார் வெண்டர் உமாபதி கலந்துகொண்டு சோலார் அமைப்பது., வங்கிகடன் பெறுவது, அரசு திட்டங்களில் மானியங்கள் பெறுவது குறித்து சோலார் மின்சாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்புரையாற்றினர். இதில் உதவி பொறியாளர்கள் கமலக்கண்ணன், கோகுல், பாண்டுரங்கன், வினோத்குமார், அரிவழகன், சையத்துல்லா, விஜயலக்ஷ்மி, வில்வமதி உள்ளிட்ட சுற்றுவட்டார பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் முதல் நாள் நவராத்திரி விழா



மாதவரம், அக்.14–

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் முதல் நாள் நவராத்திரி திருவிழா ஆலய நிர்வாகிகள், ஆலய மகளிர் குழுவினர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சயில் ஆன்மீக சேவகர் கலைச்செல்வன்–உஷாராணி குடும்பத்தினர்கள் உபயமாக ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து பின்னர் வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு சிம்மவாகனத்தில் துர்க்கை அம்மனுக்கு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களை கொலுவாக வைத்து பழங்கள் மற்றும் இனிப்புகளை படையலிட்டு பக்தர்களின் ஆன்மீக பாடல்களுடன் மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு தூப தீப ஆராதனை காண்பித்து முதல் நாள் நவராத்திரி சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதில் சுற்றுவட்டார பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கினர்

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் 15-ம் தேதி திமுக மறுசீரமைப்பு கூட்டம்

## மாவட்ட செயலாளர் மதியழகன் அறிக்கை



கிருஷ்ணகிரி, அக்.14-
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் வருகிற 15ம் தேதி திமுக மறுசீரமைப்பு கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் எம்எல்ஏ.வுமான மதியழகன் வெளியிட்டுள்ள அறிக்கை: தலைவர் மு.க.ஸ்டாலின், எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது அறிவுறுத்தல்படி அனைத்து பகுதிகளிலும், திமுக மறு சீரமைப்பு கூட்டம் நடக்கிறது.

அதன்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் வருகிற 15ம் தேதி கூட்டம் நடக்கிறது. எனது தலைமையில் நடைபெறும் இந்த கூட்டங்களில், திமுக மேலிடப்பார்வையாளர்களான முன்னாள் எம்.பி., கிருஷ்ணசாமி, திமுக மகளிர் தொண்டரணி மாநில செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் கலந்து கொண்டு, திமுக, மறுசீரமைப்பு குறித்து கட்சித்தலைமையின் கருத்துக்களை எடுத்துரைக்கின்றனர்.

வருகிற 15ம் தேதி காலை 9.30 மணிக்கு ஊத்தங்கரை எஸ்.வி.எஸ். திருமண மண்டபத்திலும், 12 மணிக்கு பர்கூர் சஞ்சீவி மஹாலிலும், மதியம் 3 மணிக்கு கிருஷ்ணகிரி தேவராஜ் மஹாலிலும் கூட்டம் நடக்கிறது. இதில், அந்தந்த சட்டசபை தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஒன்றிய நகர, பேரூர் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் மாவட்ட செயலாளர் மதியழகன் தெரிவித்துள்ளார்.

# முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் &2 நிர்வாகக் குழுவில் உறுப்பினராக சேர்வதற்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

கிருஷ்ணகிரி, அக்.14-
கிருஷ்ணகிரி மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் &2 நிர்வாகக் குழுவில் உறுப்பினராக சேர்வதற்கு வருகிற 15ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள முஸ்லீம் சமுதாயத்தை சார்ந்த கணவரால் கைவிடப்பட்ட மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில், அவர்கள் சுயமாக தொழில் செய்திட வழிவகை செய்திடும் வகையில், சிறுதொழில் புரிவதற்கு தேவையான பயிற்சிகள் அளித்து வாழ்வாதாரத்தை உயர்த்தி கிருஷ்ணகிரி மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் 2 என்ற அமைப்பு துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

அரசு ஆணைகளின்படி 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்கத்தின் உறுப்பினர்களை மாற்றம் செய்ய ஏதுவாக, மேற்படி சங்கத்தில் கவுரவ செயலாளர், கவுரவ இணைச் செயலாளர்கள் (2), உறுப்பினர்கள் (3) என மொத்தம் 6 முஸ்லீம் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் புதியதாக நியமனம் செய்யப்பட உள்ளனர்.

மேற்படி சங்க நிர்வாக குழுவில் உறுப்பினராக சேர்வதற்கு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வசிக்கும் முஸ்லீம் சமுதாயத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். சமூகப் பணிகளில் எவ்வித புகார்களுக்கும் இடமின்றி மிக்க ஆர்வத்துடன் செயல்படும் வர்களாக இருத்தல் வேண்டும். எவ்வித குற்றவியல் நடவடிக்கைகளோ, நீதிமன்ற குற்றவியல் வழக்குகளோ நிலுவையில் இருத்தல் கூடாது. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதியதாக தேர்வு செய்யப்படுவர்.

மேற்கண்ட தகுதியுடன் கிருஷ்ணகிரி மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்க நிர்வாகக் குழுவில் இடம் பெற விரும்பும் சிறுபான்மையின முஸ்லீம் சமுதாயத்தை சார்ந்தவர்கள் தங்களது சுய விவரத்துடன் விண்ணப்பத்தினை வருகிற 15ம் தேதிக்குள் கிருஷ்ணகிரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் (அறை எண்.9) சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 05 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.40,445/- மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்,இ.ஆ.ப., (12.10.2026) அன்று வழங்கினார். உடன் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.







# அம்பத்தூர் இசக்கி அம்மன் ஆலயத்தில் இரண்டாம் நாள் நவராத்திரி திருவிழா

மாதவரம், அக்.14-
அம்பத்தூர் அடுத்த கள்ளிக்குப்பம் ஓம்சக்தி நகரில் அமைந்துள்ள ஓம் சக்தி இசக்கியம்மன் ஆலயத்தில் இரண்டாம் நாள் நவராத்திரி திருவிழா ஆலய நிர்வாக செயலாளர் ஆறுமுகம் தலைமையில் சிறப்பாக நடை பெற்றது. நிகழ்ச்சியில் பக்தர்களின் திருக்கரங்களால் மூலவர் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்தனர். பின்னர் வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களை கொலுவாக வைத்து சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து இரண்டாம் நாள் நவராத்திரி விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் மற்றும் சுற்றுவட்டார பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.





# யானைமலை அடிவாரத்தில் வெளவால் தோட்டத்தை எழிலாக்கும் யா.கொடிக்குளம் ஊராட்சி: 15 ஆயிரம் மரக்கன்றுகளுடன் பசுமைப் பணியில் கவனம் இயற்கை வளத்தைப் பாதுகாக்கும் முயற்சி

மதுரை, அக்.14-
மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட யா.கொடிக்குளம் ஊராட்சி, யானைமலை அடிவாரப் பகுதியின் இயற்கைச் சூழலுடன் இணைந்து பசுமை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இப்பகுதியில் அமைந்துள்ள வெளவால் தோட்டத்தின் எழிலுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில், ஊராட்சி சார்பில் சுமார் 15 ஆயிரம் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், உள்ளூர் இயற்கைச் சூழலுக்கு ஏற்ற மரவகைகளை வளர்ப்பதும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கியப் பங்கு வகிக்கிறது. அந்த வகையில், யா.கொடிக்குளம் ஊராட்சியின் மரக்கன்று வளர்ப்புப் பணி தனிகவனம் பெறுகிறது.

யா.கொடிக்குளம் ஊராட்சி நர்சரியில் பல்வேறு வகையான மரக்கன்றுகள் மற்றும் விதைகள் வளர்ப்புக்காகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் புளியமரம், புங்கை, வேம்பு, நெல்லி, பூவரசு, இலுப்பை, நாவல், சிவப்பு வாகை உள்ளிட்ட மரவகைகள் இடம்பெற்றுள்ளன.

புளியமரம் 2,950
புங்கை மரம் 1,000
வேம்பு 3,805
பெல்டா 655
நெல்லி 261
பூவரசு 180
இலுப்பை 20
நாவல் 65
சிவப்பு வாகை 175
பாதாம் விதை 839

இவற்றில் வேம்பு மற்றும் புளியமரக் கன்றுகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. நெல்லி, பூவரசு, நாவல், இலுப்பை உள்ளிட்ட பிற மரவகைகளும் இடம்பெற்றுள்ளன. இதனால் பல்வேறு வகையான மரங்களை வளர்ப்பதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

யானைமலை அடிவாரத்தை ஒட்டிய பகுதிகளில் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பது முக்கியமானதாகும். மரங்கள் வளர்வதால் நிழல் கிடைப்பதுடன், பறவைகள் உள்ளிட்ட உயிரினங்களுக்கு வாழ்விடங்கள் உருவாகவும் வாய்ப்புள்ளது. உள்ளூர் சூழலுக்கு ஏற்ற மரவகைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை முறையாக வளர்த்து நடவு செய்வது நீண்டகாலப் பசுமை வளர்ச்சிக்கு உதவும்.

குறிப்பாக, வெளவால் தோட்டத்தின் இயற்கை அழகைப் பாதுகாப்பதோடு, சுற்றியுள்ள பகுதிகளிலும் பசுமையை விரிவுபடுத்தும் வகையில் மரக்கன்றுகள் பயனுள்ளதாக அமையலாம். இதற்காக மரக்கன்றுகள் நடப்படும் இடம், மண்ணின் தன்மை, நீர் வசதி மற்றும் மரங்களின் வளர்ச்சித் தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்வது அவசியம்.

யா.கொடிக்குளம் ஊராட்சியின் செயலாளராக குகன் பணியாற்றி வருகிறார். ஊராட்சிப் பகுதிகளில் மரக்கன்றுகளை வளர்ப்பது, அவற்றைப் பாதுகாப்பது மற்றும் உரிய இடங்களில் நடவு செய்வது போன்ற பணிகள் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கு உதவக்கூடியவை.

நர்சரியில் வளர்க்கப்படும் மரக்கன்றுகள் உரிய காலத்தில் நடவு செய்யப்பட்டு, அவை நன்கு வளர்வதற்கான பராமரிப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவது அவசியம். கன்றுகளின் வளர்ச்சியைப் பதிவுசெய்து, நடவு செய்யப்பட்ட இடங்களில் அவற்றின் உயிர்வாழ்வு நிலையைத் தொடர்ந்து கண்காணிப்பதும் பயனளிக்கும். வெளவால் தோட்டத்தின் இயற்கை எழிலுக்கும், யானைமலை அடிவாரப் பகுதியின் பசுமைக்கும் துணை சேர்க்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக, அப்பகுதியின் இயற்கைச் சூழலுக்கு ஏற்ற மரவகைகளைத் தேர்ந்தெடுத்து நடவு செய்வதும், அவற்றைப் பாதுகாப்பதும் முக்கியமாகும்.சிரமப்பட்டு வளர்க்கப்படும் ஒவ்வொரு மரக்கன்றும் உரிய இடத்தில் நடவு செய்யப்பட்டு, பயனுள்ள மரமாக உருவாக வேண்டும். நடவு செய்ததோடு பணிகள் முடிந்துவிடாமல், தண்ணீர் வழங்குதல், பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல், கால்நடைகளிடமிருந்து காத்தல் உள்ளிட்ட பராமரிப்புப் பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.யா.கொடிக்குளம் ஊராட்சியில் வளர்க்கப்படும் மரக்கன்றுகள் கணக்கில் மட்டுமின்றி, களத்திலும் பசுமையாகத் தழைக்க வேண்டும். யானைமலை அடிவாரத்தின் இயற்கை எழிலையும், வெளவால் தோட்டத்தின் சிறப்பையும் பாதுகாக்கும் வகையில், ஒவ்வொரு கன்றும் வளர்ந்து மரமாகும் வரை உரிய பராமரிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே இயற்கை ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாகும்.

# பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட சிறப்பு டெட் தேர்வு முடிவுகள் வெளியீடு!

சென்னை, அக்.14-
பணியில் உள்ள ஆசிரியர்களுக்கான சிறப்பு 'டெட்' தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டது. கடந்த ஜூலை மாதம் 4, 5ம் தேதிகளில் நடத்தப்பட்டது. இதற்கான தேர்வு முடிவுகள் நேற்று இரவு வெளியிடப்பட்டுள்ளது.

இடைநிலை ஆசிரியர்களுக்கான தாள் ஒன்று தேர்வு கடந்த ஜூலை 4ம் தேதி நடைபெற்றது. இந்த தேர்வை 222 மையங்களில் 59,535 பேர் எழுதினர். அதில் 47,628 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதாவது 80.8 சதவீதம் பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இதனை தொடர்ந்து, பட்டதாரி ஆசிரியர் பணிக்கான தாள் இரண்டு தேர்வு, கடந்த ஜூலை 5ம் தேதி 613 மையங்களில் நடைபெற்றது. இந்தத் தேர்வை 1,60,929 பேர் எழுதினர். அதில் 61,153 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதாவது 38.3 சதவீதம் பேர் தகுதி பெற்றுள்ளனர். இதன்மூலம் 1.08 லட்சம் ஆசிரியர்கள் தேர்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தில் அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர், ஆசிரியையாக பணியாற்ற வேண்டும் என்றால் 'டெட்' ஆசிரியர் தகுதி தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும் என உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

தமிழகத்தில் அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர், ஆசிரியையாக பணியாற்ற வேண்டும் என்றால் 'டெட்' ஆசிரியர் தகுதி தேர்வு தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு சிக்கலை ஏற்படுத்தியது.

எனவே, இவர்களின் வசதிக்காக 3 சிறப்பு 'டெட்' தேர்வுகள் நடத்தப்படும். அதில் பங்கேற்று ஆசிரியர்கள் தேர்ச்சி பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி முதல் சிறப்பு 'டெட்' தேர்வு ஜூலை 4, 5-ஆம் தேதிகளில் நடைபெற்றது. இந்த தேர்வை மொத்தம் 2 லட்சத்து 20 ஆயிரத்து 464 பேர் எழுதினர். இந்த தேர்வு முடிவுகள் நேற்று இரவு வெளியாகின.

இந்த தேர்வு முடிவுகள் இறுதி விடைக்குறிப்புடன் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் trb.tn.gov.in இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தேர்ச்சி பெற்ற தேர்வர்கள் 5 நாளில் தகுதி சான்றிதழை இணையதளத்தில் இருந்து டவுன்லோட் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “உள்ளாட்சித் தேர்தலில் ‘வீ த லீடர்ஸ்’ அமைப்பு போட்டியிடும்” - அண்ணாமலை அறிவிப்பு

திருவாரூர், அக்.14-
“234 தொகுதியிலும் உள்ளாட்சிகளில் தலைவர்களை உருவாக்க வேண்டும். உள்ளாட்சித் தேர்தலில் 'வீ த லீடர்ஸ்' அமைப்பு போட்டியிடும்” என அதன் நிறுவனர் அண்ணாமலை அறிவித்துள்ளார்.



திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகே சோழபாண்டியில் 15,000 மரக்கன்றுகளை நடும் பணியை 'வீ த லீடர்ஸ்' அமைப்பினர் இன்று மேற்கொண்டனர். டாக்டர் எம்.ஆனந்த் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'வீ த லீடர்ஸ்' அமைப்பின் தலைவர் அண்ணாமலை கலந்துகொண்டு மரக்கன்றுகள் நடும்பணியை தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது: ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கினால்தான், ஆரோக்கியமான அரசியலைப் பேச முடியும்.

இதே மன்னார்குடிக்கு தற்போதைய எம்எல்ஏவை வெற்றிபெற செய்ய வந்தேன். அதுபோலத்தான் தாராபுரத்திலும் சென்று வீதி வீதியாகச் சென்று பிரச்சாரம் செய்தேன். பாதம் தொட்டு வணங்கி வாக்கு சேகரித்தேன். தற்போது அந்த எம்எல்ஏக்கள் வெற்றிபெற்ற பின்னர் அந்தக் கட்சியிலேயே இல்லை.

இத்தகைய அரசியலை உடைக்க வேண்டும். இதுபோன்ற ஒருமோசமான அரசியலுக்குள் நாமும் போகக்கூடாது. இதனால் மக்களுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை. அடிப்படை பிரச்சினைகள் எழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தலைவர்களாக உருவாகின்றவர்கள் கீழிறங்கி ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீராதாரங்களை சுத்தப்படுத்துவதில் தொடங்கி, மரம் நடவைத்து அவற்றை பேணிக்காத்து மக்களுக்கும், அடுத்த தலைமுறைக்கும் கொடுக்க வேண்டும் என்கின்ற ஒற்றைக் கருத்தில் 'வீ த லீடர்' சமூகப்பணி நடைபெற்று வருகின்றது.

இதுபோன்று ஓர் அரசியல் கட்சி உருவாக வேண்டும் இதற்கு தான் நாம் காத்திருந்தோம் என மக்கள் நினைக்க வேண்டும். 234 தொகுதியிலும், உள்ளாட்சிகளிலும் தலைவர்களை உருவாக்க வேண்டும். உள்ளாட்சித் தேர்தலில் 'வீ த லீடர்ஸ்' அமைப்பு போட்டியிடும். இவ்வாறு அண்ணாமலை கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கருநாகராஜன், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் செல்வம், ராஜ்குமார், வேட்டைத் திடல் ரமேஷ், பிரபு, வழக்கறிஞர்கள் ஐயப்பன், செந்தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# மேகம் தழுவும் மலை காடம்பாறை அணையோடு காதல் கொள்ளும் பனிப்போர்வை

வால்பாறை, அக்.14-
வால்பாறை மலைப்பகுதியில் அமைந்துள்ள காடம்பாறை அணை, பசுமையான மலைக்காடுகள், நீர்த்தேக்கம், குளிர்ந்த காற்று மற்றும் மலைகளை தழுவிச்செல்லும் மேகக் கூட்டங்களால் இயற்கை எழில் கொஞ்சும் பகுதியாக விளங்குகிறது.



கடல் மட்டத்திலிருந்து சுமார் 3,770 அடி உயரத்தில் அமைந்துள்ள காடம்பாறை அணையை சுற்றியும் மலைச்சரிவுகளும் அடர்ந்த பசுமையான வனப்பகுதிகளும் காணப்படுகின்றன. மழைக்காலங்களில் மலைகளில் படர்ந்திருக்கும் பசுமையும், பள்ளத்தாக்குகளில் நிலவும் ஈரப்பதமும் இப்பகுதியின் இயற்கை அழகை மேலும் மெருகூட்டுகின்றன.

காடம்பாறை அணையின் நீர் ஆதாரமாக மலைப்பகுதிகளில் பெய்யும் மழை மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து கிடைக்கும் நீர் விளங்குகிறது. மேலும், ஆழியாறு நீர்ப்பிடிப்பு பகுதிகளுடன் தொடர்புடைய நீர்வரத்திலும், நீர்மின் திட்டத்தின் ஒரு பகுதியாக மேல் ஆழியாறு நீர்த்தேக்கத்திலிருந்து நீரை உந்தி மேலே கொண்டு செல்லும் முறையும் இத்திட்டத்தின் சிறப்பம்சங்களாக உள்ளன.

அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் மலைச்சரிவுகளின் மீது தாழ்ந்து நகரும் மேகக்கூட்டங்கள், அணையின் நீர்ப்பரப்பையும் சுற்றியுள்ள பசுமையான மலைகளையும் தழுவிச் செல்லும் காட்சி பார்ப்பவர்களை பரவசப்படுத்துகிறது.

சில நேரங்களில் அணையும் மலைகளும் மேக மூட்டத்திற்குள் மறைந்து மீண்டும் வெளிப்படும் காட்சி இயற்கையின் அழகை எடுத்துக்காட்டுகிறது. இயற்கை வளம், மலைக்காடுகள், நீர்த்தேக்கம், மேகக் கூட்டங்கள் எனப் பல்வேறு சிறப்புகளைக் கொண்ட காடம்பாறை பகுதி, வால்பாறை மலைப்பகுதியின் தனித்துவமான இயற்கை எழில் நிறைந்த இடங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.



# கைம்பெண்களுக்கு மாதம் ரூ.5,000 உதவித்தொகை வழங்க வேண்டும் மதுரையில் 6 அம்சக் கோரிக்கை மனு!

## காந்தியக் கைம்பெண்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. உமாதேவி தலைமையில் அதிகாரிகளிடம் மனு!

மதுரை அக்-14–

மதுரை மாவட்டத்தில் கைம்பெண்கள் மற்றும் தனித்து வாழும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், ஆறு அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி காந்தியக் கைம்பெண்கள் கூட்டமைப்பினர் அதிகாரிகளிடம் மனு அளித்தனர்.1. நல வாரியத்தின் செயல்பாடு: அரசின் நலத்திட்டங்கள் கைம்பெண்களுக்கும் தனித்து வாழும் பெண்களுக்கும் முழுமையாகச் சென்றடையும் வகையில் நல வாரியம் செயல்பட வேண்டும். 2. வயது வரம்பு: அரசின் பல்வேறு நலத்திட்டங்களைப் பெறுவதற்கான வயது வரம்பை 55 ஆக உயர்த்த வேண்டும்.

3. மாதாந்திர உதவித்தொகை: கைம்பெண்களுக்கான மாதாந்திர உதவித்தொகையை ரூ.5,000 ஆக உயர்த்தி வழங்க வேண்டும்.

4. அரசு வீடுகள்: சொந்த வீடின்றியும் கூரை வீடுகளிலும் வசிக்கும் கைம்பெண்கள் மற்றும் தனித்து வாழும் பெண்களுக்குப் பாதுகாப்பான அரசு வீடுகள் வழங்க வேண்டும்.

5. முழுமையான கணக்கெடுப்பு: தமிழ்நாடு முழுவதும் கைம்பெண்களின் எண்ணிக்கை மற்றும் வாழ்வாதார நிலை குறித்து அரசு முழுமையான கணக்கெடுப்பு நடத்த வேண்டும்.6. பாகுபாடின்மைச் சட்டம்: கைம்பெண்கள் பல்வேறு தளங்களில் பாகுபாட்டுடன் நடத்தப்படுவதைத் தடுக்கச் சமத்துவம் மற்றும் பாகுபாடின்மைச் சட்டம் கொண்டுவர வேண்டும்.

கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்!

கைம்பெண்கள் மற்றும் தனித்து வாழும் பெண்கள் பொருளாதார ரீதியாக முன்னேறவும், சமூகத்தில் பாதுகாப்புடனும் சம உரிமையுடனும் வாழவும் அரசு கூடுதல் நலத்திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் எனக் கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.மேலும், மனுவில் இடம்பெற்றுள்ள ஆறு அம்சக் கோரிக்கைகளையும் பரிசீலித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

# பள்ளத்தூரில் வீட்டின் முன்பு நிறுத்திய இருசக்கர வாகனம் திருட்டு 2 பேர் கைது: சிசிடிவி காட்சிகள் மூலம் குற்றச்சாட்டுக்குள்ளானவர்களை அடையாளம் கண்ட போலீசார் சிறப்பாகச் செயல்பட்ட காவல்துறையினருக்கு எஸ்.பி. அபிஷேக் குப்தா பாராட்டு!

சிவகங்கை அக்-14

சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், வீட்டின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த இருசக்கர வாகனத்தைத் திருடிய வழக்கில் இரண்டு பேரைக் காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.வீட்டின் வாசலில் நிறுத்திய வாகனம் திருட்டு!

பள்ளத்தூர் குளக்கால் தெருவைச் சேர்ந்த அப்துல் சலாம் (44) என்பவர், தனது வீட்டின் வாசலில் நிறுத்தி வைத்திருந்த TN 63 AY 7027 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஸ்பிளெண்டர் இருசக்கர வாகனம் திருடப்பட்டதாகப் பள்ளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதன் அடிப்படையில், பள்ளத்தூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 193/2026, பாரதிய நியாய சன்ஹிதா (BNS) சட்டப் பிரிவு 303(2)-ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சிசிடிவி காட்சிகள் மூலம் துப்பு துலங்கியது!



திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட காவல்துறையினர், சம்பவ இடத்தைச் சுற்றியுள்ள கண்காணிப்புக் கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர்.

அதில் கிடைத்த காட்சிகளின் அடிப்படையில், திருட்டில் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்பட்ட இருவரைக் காவல்துறையினர் அடையாளம் கண்டனர். கைது செய்யப்பட்டவர்கள்:

அஜீஸ் அப்தாஹிர் (23) நெசவாளர் காலனி, காரைக்குடி.

ராஜேஷ் (29) பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

காரைக்குடி குற்றப்பிரிவு சிறப்பு ஆய்வாளர் சரவணன் தலைமையிலான காவல்துறையினர் இருவரையும் கைது செய்தனர்.திருடப்பட்ட வாகனம் சென்னையில் விற்பனை!

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், திருடப்பட்ட இருசக்கர வாகனத்தைச் சென்னையில் உள்ள நண்பர் ஒருவருக்கு விற்பனை செய்ததாகத் தெரியவந்துள்ளதாகக் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதையடுத்து, சென்னையில் விற்பனை செய்யப்பட்ட இருசக்கர வாகனத்தை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர். காவல்துறையினருக்கு மாவட்ட எஸ்.பி. பாராட்டு!

இருசக்கர வாகனத் திருட்டு வழக்கில் கண்காணிப்புக் கேமரா காட்சிகளை ஆய்வு செய்து விரைந்து செயல்பட்டு இருவரைக் கைது செய்த காரைக்குடி குற்றப்பிரிவு சிறப்பு ஆய்வாளர் சரவணன் மற்றும் பள்ளத்தூர் காவல் நிலையக் காவல்துறையினரை சிவகங்கை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா பாராட்டினார்.



# பழைய பேருந்து நிலையத்தில் சிக்கன் பிரியாணி, முட்டை, கேசரி மற்றும் குடிநீர் பாட்டில்கள் வழங்கப்பட்டன!

தேவகோட்டை, அக்.14–

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர தமிழக வெற்றிக் கழகம் சார்பில், பழைய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர்மோர் பந்தலின் 100–வது நாளை முன்னிட்டு பொதுமக்கள் சுமார் 500 பேருக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தவெக நிர்வாகிகள் தலைமையில் நிகழ்ச்சி!

கனிமவளத்துறை அமைச்சர் டி.கே. பிரபுவின் ஆலோசனையின் பேரில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

துரை கருணாநிதி மற்றும் மாவட்டத் துணைச் செயலாளர் சரஸ்வதி துரை கருணாநிதி ஆகியோர் தலைமையில் உணவு வழங்கப்பட்டது.500 பேருக்கு பிரியாணி வழங்கல்!

நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு சிக்கன் பிரியாணி, முட்டை, கேசரி மற்றும் குடிநீர் பாட்டில்கள் வழங்கப்பட்டன.

தேவகோட்டை பழைய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சுமார் 500 பேர் உணவு பெற்றதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மேலும், தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட மற்றும் நகர நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.





# தஞ்சாவூர் மாவட்டம் திருச்சிற்றம்பலத்தில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு யாத்திரை!

## பொதுமக்களுக்குத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி மரக்கன்றுகள் நடவு!

தஞ்சாவூர் அக்.14–

கன்னியாகுமரி முதல் சென்னை வரை நடைபெற்று வரும் *போதையில்லா இளைய தலைமுறை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு யாத்திரை’**யின் ஒரு பகுதியாக, நேற்று முன்தினம் வேலூர் இப்ராகிம் தலைமையில் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே திருச்சிற்றம்பலம் பகுதியில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி வேலூர் இப்ராஹிம் தலைமையில் நடைபெற்றது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி மரக்கன்றுகள் நடவு!

போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

மரங்களை வளர்ப்பதன் அவசியம், பசுமையைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் மற்றும் எதிர்காலத் தலைமுறையினருக்குச் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து வழங்க வேண்டிய பொறுப்பு ஆகியவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்பு!

இந்நிகழ்ச்சியில் மாவட்டத் தலைவர், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

‘Nasha Mukt Yuva போதையில்லா இளைய தலைமுறை’ என்ற பெயரில் நடைபெறும் இந்த யாத்திரையின் மூலம் போதை ஒழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# தேவகோட்டை அருகே மணிமுத்தாறு ஆற்றுப்பகுதியில் அனுமதியின்றி மணல் அள்ளிக் கடத்தியதாக இரண்டு பேரைக் காவல்துறையினர் கைது செய்தனர்

## மணல் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட டிராக்டரும் பறிமுதல் செய்யப்பட்டது.கிராம நிர்வாக அலுவலர் புகாரில் நடவடிக்கை!

தேவகோட்டை, அக்.14–

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுகா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அனுமந்தங்குடி கிராமத்தில் உள்ள மணிமுத்தாறு ஆற்றுப்பகுதியில் சட்டவிரோதமாக மணல் அள்ளப்படுவதாகத் தகவல் கிடைத்தது.




இதுகுறித்து அனுமந்தங்குடி கிராம நிர்வாக அலுவலர் பிரசன்னகுமார் அளித்த புகாரின் அடிப்படையில், தனிப்படை காவல்துறையினர் சம்பந்தப்பட்ட பகுதியில் சோதனை மேற்கொண்டனர். சோதனையின்போது அனுமதியின்றி மணல் அள்ளிக் கடத்தியதாக இரண்டு பேரைக் காவல்துறையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள்:

சொர்ணலிங்கம் (38) தேரளப்பூர்.

மாணிக்கம் (49) அனுமந்தங்குடி.

மேலும், மணல் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட TN 63 H 2250 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரையும் காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு!

இந்தச் சம்பவம் தொடர்பாக தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் குற்ற எண் 329/2026 பதிவு செய்யப்பட்டது.

பாரதிய நியாய சன்ஹிதா (BNS) சட்டப் பிரிவு 303(2) மற்றும் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம் (MMDR Act) பிரிவு 21(4) ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர்.மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கடும் எச்சரிக்கை!

சிவகங்கை மாவட்டத்தில் அனுமதியின்றி கனிம வளங்களை வெட்டி எடுத்தல், மணல் கடத்தல் மற்றும் அரசு அலுவலர்களைப் பணி செய்யவிடாமல் தடுத்து அச்சுறுத்துதல் போன்ற சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா எச்சரிக்கை விடுத்துள்ளார்.



# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி, அக்.14–

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 147 மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில், ரெட்கிராஸ் சங்கம் சார்பில், மருத்துவ பயன்பாட்டிற்காக ரூ.60,000/-மதிப்பிலான ஆக்சிஜன் கருவியினை, ரெட்கிராஸ் சேர்மன் கோபாலன் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) தீபாசித்ரா, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) .புனிதா உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பேருந்து நிலையத்தில் மாதந்தோறும் பௌர்ணமி அன்று அன்னதானம் வழங்கி வரும் ஸ்ரீ ஜோதிலிங்கேஸ்வரர் சிவனடியார் சேவா பப்ளிக் சேரிடபுள் டிரஸ்ட் சார்பாக நிறுவனத் தலைவர் ஜெய் மாருதி சரவணன் பாலாறு பாதுகாப்பு நீர் மேலாண்மை குழு கே.எம். பாலு, விமல் நந்தகுமார், பொன்.கு.சரவணன் ஆகியோரிடம் பாலாறு தூய்மைப்படுத்தும் பணிக்காக ரூபாய். 50,000 நன்கொடையாக வழங்கிய காட்சி. உடன் டிரஸ்ட் நிர்வாகிகள், நண்பர்கள் உடன் இருந்தனர்.



# குன்னூர் நகராட்சி ஊழியர்கள் பணி புறக்கணிப்பு போராட்டம் நடத்தியதால் பரபரப்பு

நீலகிரி, அக்.14–

நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சியில் நகராட்சி ஆணையாளராக கிருஷ்ணா ராம் பணியாற்றி வருகிறார் இவர் நகராட்சி ஊழியர்களிடம் தரக்குறைவாகவும் ஒருமையில் பேசி ஊழியர்களை திட்டுவதாகவும் கூறி நகராட்சி ஊழியர்கள் 70க்கும் மேற்பட்டோர் பணி புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டதால் நகராட்சி பணிகள் முடங்கியது. இதனைத் தொடர்ந்து நகர மன்ற தலைவர் சுசீலா மற்றும் துணைத் தலைவர் வாஷிம் ராஜா ஆகியோர் நகராட்சி ஊழியர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணராம் இடம் பேச்சுவார்த்தை நடத்தி சமாதனம் செய்து சுமூகத் தீர்வை எட்டியதால் நகராட்சி ஊழியர்கள் நான்கு மணிநேர பணி புறக்கணிப்பு போராட்டத்தை நிறைவு செய்து ஊழியர்கள் அனைவரும் பணிக்கு திரும்பினர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161